DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
NANNILAM.

**CC . No. 34/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | PW1 / LW1 | Caste | : | |
| Name | : | ஸ்ரீதேவி | Age | : | 30 |
| Husband Name | : | அன்பரசன் | Occupation | : | வீட்டுக்குடித்தனம் |
| Village | : | கோமல் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 23rd day of February 2023.

23.02.2023

**(Accused absent. Petition u/s.317 crpc filed and allowed)**

**முதல் விசாரணை** :

நான் தற்போது கோமலில் எனது கணவர் வீட்டில் குடியிருந்து வந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எனது தகப்பனார் ரவி. எனது தகப்பனார் வீடு திருமியச்சூர் வடபாதி தெருவில் உள்ளது. எனது தாயார் செல்வி. எனது தங்கைகள் பிரியங்கா, சிந்தியா மற்றும் சரண்யா. கடந்த 24.10.2020 ம் தேதி இரவு 10.00 மணியளவில் நானும், எனது தாயார் மற்றும் தங்கைகளுடன் எனது பெற்றோர் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது எங்களது பக்கத்து வீட்டு அன்பழகன் மகன் பாடலீஸ்வரன் என்பவரது வீட்டு மாடு எங்கள் வீட்டு மாட்டை முட்டி இரத்தம் வந்தது. உடனே நாங்கள் சென்று பார்த்து பாடலீஸ்வரன் வீட்டில் வேலை பார்க்கும் தன்ராஜ் என்பவரை கூப்பிட்டு மாட்டை பிடித்து கட்டுங்கள் என்று சொன்னேன். அப்போது பாடலீஸ்வரன் வீட்டிற்குள் இருந்து வரும்போதே கட்டையுடன் கெட்ட வார்த்தைகளால் பேசி, என்னையும், எனது தாயாரையும் அடித்து கீழே தள்ளினார். மேலும், நான் மற்றும் எனது தாயார் மற்றும் தங்கை சரண்யா ஆகியோர் தலையை வெட்டி பேரளம் காவல்நிலைய வாசலில் வைத்தால் யார் கேட்பார்

என்று சொல்லி மிரட்டினார். உடனே நாங்கள் காவல்நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தோம். அப்போது நாங்கள் எங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு காவல்நிலையம் செல்வதற்கு பாடலீஸ்வரன் வீட்டை கடந்துதான் செல்ல வேண்டும். ஆனால், எங்களை காவல்நிலையம் செல்வதற்கே விடவில்லை. மீறி நாங்கள் காவல்நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தோம். எதிரி பாடலீஸ்வரனால் எங்களுக்கும், எங்களது குடும்பத்திற்கும் எப்போது வேண்டும் என்றாலும் பிரச்சனை ஏற்படலாம் என்ற நிலையில் உள்ளோம். மேற்படி சம்பவம் எங்களது வீட்டு வாசலில்தான் நடந்தது. எங்களை பெண் என்றும் பாராமல் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, கட்டையால் அடித்தார். எங்கள் தெருவில் உள்ள நபர்கள் அவருக்கு பயந்து கொண்டு யாரும் சாட்சியம் அளிக்க முன்வர மாட்டார்கள். மேற்படி சம்பவம் நடந்தபோது அக்கம் , பக்கத்தில் இருந்தவர்கள் பார்த்தார்கள். எதிரிக்கு எதிராக யாரும் சாட்சியம் அளிக்க வரமாட்டார்கள். மேற்படி பாடலீஸ்வரன் என்பவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும்.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**